போதைப் பொருள் தடுப்பு விவகாரத்தில் அவதூறு

# எடப்பாடி, அண்ணாமலை மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் வழக்கு

**முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல்**

**சென்னை, மார்ச் 15:** போதை பொருள் நடமாட்டம் தொடர்பாக பொய்யான தகவல்களையும் அவதூறு கருத்துகளையும் வெளியிட்ட அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜ தலைவர் அண்ணாமலை மீது சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் மாநகர அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் தாக்கல் செய்த மனு:

கடந்த மாதம் 8ம்தேதி முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி பத்திரிகையாளர் சந்திப்பின் போது, தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இதை தடுக்க அரசும், முதல்வரும் தவறிவிட்டனர் என்று உண்மைக்கு முரணான கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமியின் இந்த கருத்து முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. போதை பொருள் ஒழிப்பில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. கஞ்சா இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்ற முதல்வர் பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

போதை பொருள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மாணவ, மாணவிகள் மத்தியில் போதை பொருட்களின் தீமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து, மகளிர் உரிமை தொகை, மாணவர்களுக்கு காலை உணவு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தி வரும் தமிழக முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் மக்களிடம் முதல்வருக்கு உள்ள மரியாதையை கெடுக்கும் வகையிலும் எடப்பாடி பழனிசாமி அவதூறு கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

இது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 499 மற்றும் 500ன் கீழ்(அவதூறு பரப்புதல், அவதூறு வெளியிடுதல்) ஆகியவற்றின் கீழ் தண்டனைக்கு உரிய கிரிமினல் குற்றம். எனவே முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி கருத்துகளை வெளியிட்ட எடப்பாடி பழனிசாமி மீது அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று, தமிழக பாஜ தலைவர் அண்ணாமலை மீதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் மாநகர அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில், கடந்த மாதம் 29ம்தேதி தமிழக பாஜ தலைவர் அண்ணாமலை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு போதை பொருள், கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் அனைத்துமே பொது வெளியில் சர்வசாதாரணமாக கிடைக்க ஆரம்பித்திருக்கிறது என்பது உள்ளிட்ட பொய்யான குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார்.

அண்ணாமலையின் இந்த அறிக்கை தமிழ்நாடு அரசுக்கும், முதல்வருக்கும் மக்களிடையே உள்ள நன்மதிப்பை கெடுக்கும் வகையில் உள்ளது. தமிழக முதல்வர் தமிழகத்தை கஞ்சா பயிரிடப்படாத மாநிலமாக மாற்றி வருகிறார். ஆந்திரா, கர்நாடகா, ஒடிசா, தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்குள் கஞ்சா வருவதை தடுக்க போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கடுமையான நடவடிக்கையும் கண்காணிப்பு பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

போதை பொருள் கடத்தலை தடுப்பது தொடர்பாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றவாளிகளின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவர்களின் வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் மக்களிடையே பொய்யான கருத்துகளை அரசியல் உள்நோக்கத்துடன் அண்ணாமலை வெளியிட்டுள்ளார். எனவே அவர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 499 மற்றும் 500ன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும் .

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

### இபிஎஸ் மீது ₹1 கோடி நஷ்டஈடு கேட்டு ஐகோர்ட்டில் வழக்கு

திமுக சார்பில் அதன் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், போதைப் பொருள் தொடர்பான சமீப நிகழ்வுகளில் திமுகவை தொடர்புபடுத்தி எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார். கடந்த 8ம் தேதி பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த அவர் தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இதை தடுக்க அரசும், முதல்வரும் தவறிவிட்டனர் என்று உண்மைக்கு முரணான கருத்துக்களை தெரிவித்துள்ளார். எடப்பாடி பழனிசாமியின் இந்த கருத்து தமிழக முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. போதைப்பொருள் ஒழிப்பில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு அரசு உள்ளது. கஞ்சா இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்ற முதல்வர் பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

போதை பொருள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மாணவ, மாணவிகள் மத்தியில் போதை பொருட்களின் தீமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. எடப்பாடி பழனிசாமியின் இந்த பேட்டியால் முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சி நடந்துள்ளது. எனவே, உண்மைக்கு முரணாக, அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் பேசியுள்ள எடப்பாடி பழனிசாமி ₹1 கோடி நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட வேண்டும். இது குறித்து எடப்பாடி பேச தடைவிதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த மனு உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## புதுவையில் புதிய அமைச்சர் பதவியேற்பு



**புதுச்சேரி, மார்ச் 15:** புதுச்சேரியில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த சந்திரபிரியாங்கா டிஸ்மிஸ் செய்யப்பட்டதை தொடர்ந்து, 5 மாதத்துக்கு பின் புதிய அமைச்சராக காரைக்கால் வடக்கு தொகுதி எம்எல்ஏ திருமுருகன் நியமிக்கப்பட்டார்.

இவர் நேற்று புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் நடந்த விழாவில் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பின்னர் முதல்வர் ரங்கசாமி காலில் விழுந்து ஆசி பெற்றார்.

₹480 கோடி போதைப்பொருள் பறிமுதலில்

# அரைவேக்காடுத்தனமாக எடப்பாடி பதில் சொல்கிறார்

**அண்ணாமலை கடும் தாக்கு**

**சென்னை, மார்ச் 15:** குஜராத் துறைமுகம் வழியாக போதைப் பொருள் கடத்தப்படுவது குறித்து எடப்பாடி பழனிசாமி அரைவேக்காடுத்தனமாக பேசுகிறார் என்று அண்ணாமலை கூறினார்.

தமிழ்நாடு பாஜ தலைவர் அண்ணாமலை நேற்று இரவு 7 மணிக்கு சென்னையில் இருந்து திருவனந்தபுரம் புறப்பட்டு சென்றார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழ்நாடு முதல்வர் சரித்திர புத்தகத்தை சரியாக படிக்க வேண்டும். அவர் என் மீது கிரிமினல் அவதூறு வழக்கு போட்டு உள்ளார்.

சென்னையில் உள்ள குடோனில் நடத்திய சோதனைகளில், லேப் பாக இருக்க கூடும் என்ற சந்தேகம் உள்ளது. எங்கள் சந்தேகங்களுக்கு விடை கிடைத்து கொண்டு இருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி எதுவும் தெரியாமல் பேசுவது ஆச்சரியம் மட்டுமல்ல, வருத்தம் அளிப்பதாகவும் உள்ளது. நாகாலாந்து, இமாச்சல் பிரதேசம், குஜராத் போன்ற பகுதிகளில் முந்தரா துறைமுகத்தில், போதைப் பொருட்களை பெருமளவு பிடித்து இருப்பதற்கு, பாராட்டு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், எடப்பாடி பழனிசாமி அரைவேக்காடுத்தனமாக பதில் சொல்ல கூடாது.

இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

## தமிழ் கட்டாய பாட சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும்

**ராமதாஸ் வலியுறுத்தல்**

**சென்னை, மார்ச் 15:** அடுத்த ஆண்டு முதல் தமிழ் கட்டாயப் பாடச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் வரும் 26ம் தேதி தொடங்க இருக்கும் நிலையில், நடப்பாண்டிலும் தமிழ் கட்டாயப்பாடம் இல்லை; மொழிச் சிறுபான்மையினர் நடப்பாண்டில் அவர்களின் தாய்மொழிப் பாடத்தில் தேர்வு எழுதலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

தமிழ் கட்டாயப் பாட சட்டம் இயற்றப்பட்டு 18 ஆண்டுகள் ஆகியும் தமிழாசிரியர்களை நியமிக்காதது ஏன் என்று அந்த பள்ளி நிர்வாகங்களிடம் தமிழக அரசு வினா எழுப்பியிருக்க வேண்டும்.

ஆனால், எந்த வினாவும் எழுப்பாமல், தமிழ்ப் பாடத் தேர்வை எழுதுவதிலிருந்து மேலும் ஓராண்டுக்கு விலக்கு அளித்திருக்கிறது. தமிழ்க் கட்டாயப்பாடச் சட்டம் எப்போது முதல் நடைமுறைக்கு வரும் என்பதும் தெரியவில்லை.

அன்னைத் தமிழ் அரியணை ஏற இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ஆகுமோ, இந்த அவலநிலை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். எனவே, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை முடிவுக்கு கொண்டு வந்து, அடுத்த ஆண்டு முதல் தமிழ்க் கட்டாயப் பாடச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**BRIC – டிரான்ஸ்லேஷனல் ஹெல்த் சயின்ஸ் அண்டு டெக்னாலஜி இன்ஸ்டிடியூட்** (thsti / BRIC)

(உயிர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைப்பு நிறுவனம், இந்திய அரசு)
NCR பயோடெக் சயின்ஸ் க்ளஸ்டர், 3வது மைல்ஸ்டோன், பரீதாபாத் – குருகிராம் விரைவுவழிச் சாலை, அஞ்சல் பெட்டி எண்.04, பரீதாபாத் – 121001

**ஆள்சேர்ப்பு அறிவிப்பு எண். THS-C/RN/04/2024**

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | மாதாந்திர ஊதிய விகிதம் (அனைத்தையும் சேர்த்து) அனுபவம் மற்றும் தகுதியின் அடிப்படையில் |
|---|---|---|---|
| 1. | தகவல் ஆய்வாளர் | 01 | ₹ 65,000/- |
| 2. | கள கண்காணிப்பாளர் (KL, TL, WB) (01 மாநிலத்துக்கு ஒன்று) | 03 (கேரளா, தமிழ்நாடு & மேற்கு வங்கம்) | ₹ 30,000/- |

மேலும் விவரங்களுக்கு, www.thsti.res.in இணையதளத்தை பார்வையிடவும்

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளியில் உள்ள ஆலோசனைப்படி குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் https://tntenders.gov.in/nicgep/app மின்னணு ஒப்பந்தப்புள்ளி மறுநிலை ஏலத்துடன் (e-tender cum e-reverse auction) வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி விவரக்குறியீட்டு எண் | வழங்கும் பொருட்களின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 1) | நிலக்கரி 156 நாள் 14.03.2024 | மின்னணு ஒப்பந்தப்புள்ளி மறுநிலை ஏலத்துடன் (e-tender cum e-reverse auction) மற்றும் மாறும் விலைகுறியீட்டுடன், தேவைப்படும்போது தேவைப்படும் அளவிற்கு என்ற அடிப்படையில், NCTPS-III நிலையத்திற்கு வெளிநாட்டு நிலக்கரியினை (5000 GAR), காமராஜர் துறைமுகம் / எண்ணூர் வாயிலாக வழங்குவதற்காக, NIC மின் தளத்தின் மூலம் கோரப்படுகிறது. | 22.04.2024 அன்று பிற்பகல் 14.00 மணி வரை |
| | ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யவும் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்கவும் இணையதள முகவரிகள் | https://tntenders.gov.in/nicgep/app | |
| | ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான படிவம் இலவசமாக பதிவிறக்கம் செய்ய இணையதள முகவரிகள்: | https://tntenders.gov.in/nicgep/app www.tangedco.gov.in, www.tantransco.gov.in, www.tenders.tn.gov.in | |

இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி விவரக்குறியீட்டை இலவசமாக பார்ப்பதற்கும் பதிவிறக்கம் செய்யவும் நாளும் நேரமும் : தேதி 25.03.2024 – 17.00 மணி முதல், 22.04.2024 – 14.00 மணி வரை

செ.ம.தொ.இ/1630/ஒப்பந்தப்புள்ளி/2024 — தலைமை பொறியாளர் / இயந்திரவியல் / நிலக்கரி, த.மி.உ.ப.க., சென்னை-2

GOVERNMENT OF TAMIL NADU
**TAMILNADU SKILL DEVELOPMENT CORPORATION**

RFP No : TNSDC/NM-2/IT/2024 — **E-TENDER NOTICE** — Date: 14.03.2024

Online Tenders are invited by MD – TNSDC towards the selection of firm / organization for supply of development team for the enhancement, O & M of portals operated by TNSDC (Naan Mudhalvan - **https://naanmudhalvan.tn.gov.in** and TNSDC - **https://www.tnskill.tn.gov.in**) for period of 3 years. The Tender document (RFP) can be downloaded at free of cost **https://tntenders.gov.in** from **18.03.2024 – 10:00 AM.** Pre-Bid Meeting is scheduled online **on 27.03.2024 – 03:00 PM** through VC in the link provided in the RFP. EMD for an amount of Rs. 2.5 Lakhs has to paid through online mode. The applications are invited only **through online**. Last date for receipt of application: **03.05.2024 up to 03:00 PM** through **https://tntenders.gov.in.** Technical Bid shall be opened online on **06-05-2024 at 03:00 PM.** For details and particulars of tender please visit following link **https://tntenders.gov.in** or **https://naanmudhalvan.tn.gov.in**

Managing Director
TAMILNADU SKILL DEVELOPMENT CORPORATION,
Nandanam, Chennai-600035

DIPR/1651/TENDER/2024

**மதுரை மாநகராட்சி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 77/2024**

மதுரை மாநகராட்சி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள் | ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | **E6/Est.No.299 / 2023 - 24** மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.4 வார்டு எண்.29ல் உள்ள செல்லூர் பாலம் ஸ்டேசன் ரோடு பகுதியில் பாலம் வேலை நடைபெறுவதால் பழுதடையும் Sewage Pumping Lineக்கு பதிலாக புதிய 700mm CI Main மற்றும் Water Supply Main பதிலாக புதிய 300mm & 250 mm CI Main அமைத்தல் (Tender Put Value : Rs.282.02/- Lakh) | 15.03.2024 to 02.04.2024 3.00 pm | 02.04.2024 4.00 pm |

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
Contact No : 0452-2540333
ஆணையாளர், மதுரை மாநகராட்சி
செ.ம.தொ.இ / 1617 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**ஆவின் — ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.,**
வாசவி கல்லூரி (அஞ்சல்), ஈரோடு-638 316. மின்னஞ்சல் : eroaavin@gmail.com

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு உட்பட்ட தொகுப்பு பால் குளிர்விப்பான்களுக்கு ஒப்பந்தத்தில் இயக்கவும் இரு பிரிவு அடிப்படையில் தொழில்நுட்பம் மற்றும் வணிக நுட்பம் (Under Two Part System) ஒப்பந்தப்புள்ளியை ஈ-டெண்டர் (E-Tender) வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் | 22.04.2024 மாலை 4.00 மணி வரை |
| 2 | ஒப்பந்தப்புள்ளி முன் விளக்க கூட்ட நாள் | 25.03.2024 காலை 11.00 மணி |
| 3 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும் இடம் | ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈரோடு வாசவி கல்லூரி(அ) ஈரோடு - 638316 |
| 4 | பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்(Upload) | 23.04.2024 காலை 10.00 மணி வரை |
| 5 | ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப படிவம் திறக்கும் நாள் | 23.04.2024 பகல் 11.00 மணி |
| 6 | ஒப்பந்தப்புள்ளி வணிகநுட்ப படிவம் திறக்கும் நாள் | வணிகப்புள்ளிகள் திறக்கப்படும் விபரம் www.tntenders.gov.in என்ற இணையதளம் மூலமாக தெரிவிக்கப்படும். |
| 7 | ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் அதன் தொடர்பான அனைத்து விபரங்களும் www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக மாற்றம் இருப்பின் மேற்காணும் இணையதளத்தில் மட்டும் பதிவேற்றம் செய்யப்படும். | |
| 8 | எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் மறுக்கவோ, மாற்றி அமைக்கவோ அல்லது நிராகரிக்கவோ பொது மேலாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. | |

இடம் : ஈரோடு, நாள் : 14.03.2024 — செ.ம.தொ.இ./1648/ஒப்பந்தப்புள்ளி/2024
பொது மேலாளர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.,

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண். 68, கல்லூரிச் சாலை, சென்னை – 600 006. தொலைபேசி: 044 - 28275852, தொலைஅச்சு: 044 - 28224493; மின்னஞ்சல்: jd.tntbesc@tn.gov.in

ந.க.எண்.1697/PUR-II/2023 — **Expression of Interest கோரும் அறிவிப்பு** — நாள்: 14.03.2024

| | | |
|---|---|---|
| 1. | Expression of Interest-ல் வழங்க வேண்டிய பொருளின் விவரம் | Expression of Interest on www.tntenders.gov.in for the Creation of Educational Videos and Publication in Services model for Kalvi TV Channels. |
| 2. | Expression of Interest சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 16.04.2024 அன்று பிற்பகல் 05.00 மணி வரை |
| 3. | முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் | 05.04.2024 அன்று பிற்பகல் 03.00 மணி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், கல்லூரிச் சாலை, சென்னை–6 |
| 4. | பெறப்பட்ட Expression of Interest திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம் | 17.04.2024 அன்று பிற்பகல் 03.00 மணி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், கல்லூரிச் சாலை, சென்னை–6 |
| 5. | பிற விவரங்கள் மற்றும் Expression of Interest படிவம் இலவசமாக பெற்றுக் கொள்ளக்கூடிய இணையதள முகவரி | a) http://www.textbookcorp.tn.gov.in b) http://tntenders.gov.in |

மேலாண்மை இயக்குநர்,
ஒப்பந்த அழைப்பு அதிகார அலுவலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை – 6.
செ.ம.தொ.இ./1642/ஒப்பந்தப்புள்ளி/2024

**CHENNAI METRO RAIL LIMITED**
(A Joint Venture of Govt. of India & Govt. of Tamil Nadu)
(ISO 9001:2015 AND ISO 14001:2015 CERTIFIED)
METROS, ANNA SALAI, NANDANAM, CHENNAI - 600 035.

File No: CMRL/ BD/E&M/PIERS-ADVT/2024 — Dated:15/03/2024

**E-Tender Notice**
**Tender No: CMRL/ BD/E&M/PIERS-ADVT/2024**
**e-procurement tender**
**National Competitive Bidding**

CMRL invites digitally signed tender through e-procurement portal from reputed, experienced, financially sound, eligible applicants, who fulfill the qualification criteria as mentioned in the tender through National Competitive Bidding under Single Stage Two Envelope (Technical & Financial) system for the work as detailed below:

**Tender No: CMRL/ BD/E&M/PIERS-ADVT/2024: "Supply and laying of electrical cables on viaduct of CMRL Metro corridors to power the advertisement hoardings on the piers."**

For further details, please visit e-procurement website :
www.chennaimetrorail.org : For NIT (Notice inviting Tender)
http://eprocure.gov.in/eprocure/app : For downloading Bid Documents

DIPR/ 1618 /TENDER/2024 — Advisor (E&M)

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**
Abishekapatti- Tirunelveli 627 012. website: www.msuniv.ac.in
STATE LEVEL ELIGIBILITY TEST(SET) – 2024
Notification No. 01/2024 Date : 20.03.2024

**ANNOUNCEMENT**

Manonmaniam Sundaranar University will host the notification on **20.03.2024** for SET Examination for the eligibility of Assistant Professors in University/Colleges. The SET examination will be conducted in 43 subjects in Computer Based Test (CBT) mode and the details are available in the University website. **(www.msuniv.ac.in)**

**IMPORTANT DATES**

| | | |
|---|---|---|
| 1 | Date of Notification | **20.03.2024** |
| 2 | Date of Commencement of Applying through online mode | **01.04.2024** |
| 3 | Last date of submission of Application through online mode | **30.04.2024** |
| 4 | Date of Examination | **03.06.2024** (Tentative) |

For other information relating to educational qualification, age limit, reservation norms, examination scheme, Exam fee payment and other details, the candidates are advised to refer further details in the University Website.

DIPR/ 407 /DISPLAY/2024 — REGISTRAR

**க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே-411036.
**கோரிக்கை அறிவிப்பு சர்ஃபாசி சட்டம், 2002-இன் பிரிவு 13(2)**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ உப கடன்தாரர்/ ஆகிய நீங்கள், உங்கள் அசையா சொத்து அல்லது சொத்துகளையோ, சொத்து வசதிகளையோ வீட்டுக் கடன்/கடன்கள் பெறுவதற்காக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜிஇ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பின்னர் கடனீட்டுக் கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும் நிறுவனத்தில் அடமானம் வைத்திருக்கிறீர்கள். நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், உங்களுடைய கடன் செயல்படாத சொத்துப் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டு (அமலாக்க) விதிகள் 2002 இன் கீழ் திருப்பிச் செலுத்தப்படாத கடனை மீட்பதற்கான கோரிக்கை அறிவிப்பு உங்களுடைய கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதை நீங்கள் பெற்றுக் கொள்ளாததால் திரும்ப வந்துவிட்டது. எனவே கோரிக்கை அறிவிப்பில் உள்ளவற்றை கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2), விதி 3 (1) இன் படி மாற்றுமுறையில் வெளியிடப்பட்டுள்ளது.
கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், பாதுகாவலர்கள், செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகிய விவரங்கள் கோரிக்கை அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டவர்களுக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (2) கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை | கடனீட்டுச் சொத்துகளின் விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு நாள் / நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 3. | கந்தராஜ் R, நந்தினி கடன் தொகை: ரூ. 6,50,000/- கடன் கணக்கு எண். HL/0111/H/19/100072 | சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் பழைய சர்வே எண். 389, புதிய சர்வே எண். 389/2, கல்லபாடி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, குடியாத்தம் தாலுகா மற்றும் சார் பதிவு அலுவலகம், வேலூர் மாவட்டத்தில் 864 ச.அடி பரப்பானது, கல்லபாடி, இந்திய அஞ்சல் குறியீடு எண். 632602 இடத்தில் உள்ளது. **எல்லைகள்: கிழக்கு:** திரு. ஐயப்பன் என்பவருக்கு சொந்தமான சொத்து, **மேற்கு:** நடைபாதை, **வடக்கு:** திரு.ராமச்சந்திரனுக்கு சொந்தமான சொத்து, **தெற்கு:** திரு. காசி மற்றும் கந்தசாமிக்கு சொந்தமான சொத்து. | 07.03.2024 ரூ. 6,34,046/– (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நாற்பத்து ஆறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரை கூடுதலாக ஆண்டொன்றுக்கு 16% வட்டி. |
| 4. | S விஸ்வநாதன், சிகாமணி, இந்திராணி சிகாமணி, தினேஷ் S கடன் தொகை: ரூ. 8,00,000/- கடன் கணக்கு எண். HM/0111/H/17/100520 | சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் சர்வே எண். 65/3f, பட்டா எண்.144 கதவு எண். 043/155–2 வளையல்காரப்பட்டி கிராமம், ஒடுகத்தூர், வேலூர் தாலுகா மற்றும் மாவட்டத்தில் 4360 ச.அடி பரப்பானது டெம்பிள் சிபிஎஸ்இ பள்ளி அருகில் 635804 இடத்தில் உள்ளது. **எல்லைகள்: கிழக்கு:** நடராஜனுக்கு சொந்தமான சொத்து, **மேற்கு:** காலனி கட்டடம், **வடக்கு:** பழைய காலனி கட்டடம் மற்றும் சாலை, **தெற்கு:** நடராஜனுக்கு சொந்தமான சொத்து. | 07.03.2024 ரூ. 6,21,032/– (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்து ஓராயிரத்து முப்பத்து இரண்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரை கூடுதலாக ஆண்டொன்றுக்கு 16.75% வட்டி. |

எனவே கடன்தாரர்/கள் மற்றும் உப-கடன்தாரர்/கள்/ ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட கோரப்பட்டத் தொகையை இங்கே மேலே குறிப்பிட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் இந்த அறிவிப்பின் 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள். தவறினால் கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து/களின் மீதான சட்டத்தின் கீழ் நடவடிக்கையை செயல்படுத்தும் நிர்பந்தத்துக்கு உள்ளாவார். அதேவேளையில் நீங்கள், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, எங்கள் ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இடம்: தமிழ்நாடு, நாள்: 15.03.2024
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

**TAMILNADU POWER FINANCE AND INFRASTRUCTURE DEVELOPMENT CORPORATION LIMITED**
(A Government of TamilNadu Enterprise)
No.490-3/4 "Tufidco-Powerfin" Tower, Anna Salai, Nandanam, Chennai-600 035.

TN Power Finance Corporation invites application from candidates for the following post on Contract basis with Consolidated pay. The details are given below.

| Name of the Post | Salary | Educational Qualification | Number of Post |
|---|---|---|---|
| Chief Investment Officer | As per Market Standard (Negotiable) | CFA /CPA / CA / MBA (Finance) from Business School. Experience: Minimum 5 years of experience in Investment banking, Mutual funds, NBFC, Insurance Sectors in which minimum 2 years of experience in raising securities from secondary market and adequate knowledge in SEBI regulations. | 1 |

Age Limit for the above post is 50 years or below. The last date for submission of application is on **16.04.2024 @ 4.00 pm** and the bio-data containing educational qualifications, experience and other credentials shall be sent by registered post or speed post or e-mail to the following address.

**Chief Financial Officer**
**TamilNadu Power Finance and Infrastructure Development Corporation Limited,**
**No.490/3-4 ,"TUFIDCO POWERFIN" Tower,**
**Anna Salai, Nandanam, Chennai - 600 035.**

Email: cfo@tnpowerfinance.com

Note : The Board of Management reserves the right to fill or not to fill up the post without assigning any reason whatsoever.

Date: 14.03.2024 — DIPR/411/Display/2024 — **Chairman and Managing Director**

**க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** (முன்னதாக, பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036. கிளை அலகு: இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, எண்.5, காட்பாடி பிரதான சாலை, பாலார் பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்
**மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு** — சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், **பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம்,** 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 30.03.2024 தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| வ. எண் | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B) | சுவாதீனத் தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை (நிர்ணயவிலையில் 10%) (F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் எண்: HM/0111/H/17/100474 ஏழுமலை மனோகரன் (கடன்தாரர்), E. வசந்தி (உப–கடன்தாரர்) | அறிவிப்பு தேதி:15.11.2021 15.11.2021 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.10,19,055/– (ரூபாய் பத்து லட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐம்பத்து ஐந்து மட்டும்) மற்றும் அதுவரையிலான ஆண்டு வட்டி 13.50 சதவீதம் உட்பட. | கையக சுவாதீனம் | பழைய S.F.No.15/1, 15/2, மனை எண்.121, லபைமாங்குப்பன் கிராமம், குப்புசாமி கவுண்டர் நகர், ஆம்பூர் வட்டம், வேலூர் மாவட்டம், பின்கோடு–635805 இல் உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய அடமானம் வைக்கப்பட்ட சொத்து. | ரூ.17,33,485/– (ரூபாய் பதினேழு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நானூற்று எண்பத்தைந்து மட்டும்) | ரூ.1,73,348.50/– (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு மற்றும் பைசா ஐம்பது மட்டும்) | 28.03.2024 மாலை 5.00 மணிக்கு முன்பாக | ரூ.10,000/– | 22.03.2024 (11 AM– 4 PM) | 30.03.2024 (11 AM– 2 PM) | ஒன்றுமில்லை |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உட்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: வினோத் சௌகான், மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com, தொடர்பு எண்.9813887931 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். **ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை** (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20,R.N. Mukherjee road, Kolkata–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 28.03.2024 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, எண்.5, காட்பாடி பிரதான சாலை, பாலார் பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 8588802671, +91 9567626050 மின்னஞ்சல் முகவரி rahul.r1@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

நாள்: 15.03.2024, இடம்: வேலூர் — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)